# பில்ட்எக்ஸ் 2019 கண்காட்சி அறிக்கை:

<u>துவக்கவிழா:</u>

மடீட்சியாவின் பில்ட் எக்ஸ் 2019 கண்காட்சி மடீட்சியா அரங்கில் 26.04.2019 அன்று சிறப்பாக துவங்கியது. துவக்கவிழாவில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. R.B.உதயகுமார் அவர்கள் குத்துவிளக்கேற்றி, துவக்கவுரையாற்றினார்கள். டான்சியா தலைவர் திரு. S.அன்புராஜன் அவர்களும் தமிழ்நாடு மற்றும் பாண்டிசேரியின் சிவில் இன்சினியரிங் சங்கத்தலைவர் திரு. முரளிகுமார் அவர்களும் AMCE தலைவர் திரு.அறிவழகன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். மடீட்சியா மற்றும் AMCE இணைந்து நடத்திய இக்கண்காட்சியின் முதல் நாளே தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் பாண்டிசேரியிலிருந்து திரளான பார்வையாளர்கள் வருகை புரிந்தனர். கண்காட்சியில் ஜெர்மனி நிறுவனத்தாரும் ஸ்டால் அமைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நான்கு நாட்கள் நடைபெற்ற கண்காட்சியில் மொத்தம் 15000 பார்வையாளர்கள் வருகை புரிந்தனர். 1500 பொறியாளர்கள் பார்வையிட்டனர். கண்காட்சியில் அரங்கு அமைத்தவர்களிடம் ரூ.14 கோடிக்கு வியாபாரத்திற்கான விசாரணை வந்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

**சிறப்பம்சங்கள் :**

- 95 ஸ்டால்கள் அமைக்கப்பட்டிருந்தன.
- பாரம்பரிய ஆத்தங்குடி டைல்ஸ் ன் நேரடி செயல்முறை விளக்கம்.
- இலவச வாஸ்து
- இலவச கட்டிட வரைபடம்
- மழைநீரை சேமித்து குடிநீராக பயன்படுத்துவது குறித்த சிறப்பு விளக்கம்
- அடித்தளம் 5 அடிவரை உயர்த்துவது மற்றும் 15அடி வரை நகர்த்துவது குறித்து சிறப்பு விளக்கம்

<u>கருத்தரங்குகள்:</u>

27.04.2019

1) மடீட்சியாவின் பில்ட் எக்ஸ் கண்காட்சியில் முத்தாய்ப்பாக கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. 27.04.2019 அன்று காலை 10.30 மணியளவில் “மழைநீர் சேகரிப்பு” குறித்த கருத்தரங்கம் மடீட்சியா ஹாலில் நடைபெற்றது. PWD ன் முன்னாள் தலைமை பொறியாளர் திரு.N. அருணாச்சலம் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

2) மேற்படிதினம், மாலை 5.30 மணியளவில் “எளிய முறையில் தரமான கட்டிடங்கள் கட்டும் வழிகள்” குறித்து Structural Engineer திரு.S..அருண்குமார் அவர்கள் சிறப்பான விளக்கப்படம் மூலம் தெளிவுரை ஆற்றினார்.

28.04.2019

1) மடீட்சியாவின் பில்ட் எக்ஸ் கண்காட்சியின் கருத்தரங்கில் 28.04.2019 அன்று காலை 10.30 மணியளவில் தொழிலாளர் நல வாரிய அலுவலர் திரு.குமார் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார். 100க்கும் மேற்பட்ட கட்டிட தொழிலாளர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

2)மேற்படிதினம், மாலை 4.30 மணியளவில் “Connect For Specifiers” குறித்த கருத்தரங்கம் மடீட்சியா ஹாலில் நடைபெற்றது. இதில் நிப்பான் பெயிண்ட்ஸ் நிறுவனத்தைச் சார்ந்த செல்வி.சஞ்சனா முரளி உரையாற்றினார். பொறியாளர்களுக்கான அங்கீகாரம், விருதுகள் மற்றும் பயன்பாடுகள் குறித்து சிறப்பாக விளக்கப்பட்டது.

3) அன்றைய தினமே, மாலை 6.30 மணியளவில் ‘‘சுற்றுப்புற சூழலுக்கு ஏற்ப, கட்டிடங்கள் அமைக்கும் முறைகள்’’ குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கில் தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் பேராசிரியர் Ar.G.பாலாஜி அவர்கள் சிறப்பாக உரையாற்றினார்.

29.04.2019

1) மடீட்சியாவின் பில்ட் எக்ஸ் கண்காட்சியில் 29.04.2019 – திங்கட்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் மடீட்சியா அரங்கில் ‘‘கட்டிடங்கள் பழுது நீக்குதல் மற்றும் புனரமைத்தல்’’ குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. தரமானதாகவும், நீண்ட வருடங்களுக்கு கட்டிடத்தின் ஆயளை நீட்டிக்கவும் வழிவகைகள் விளக்கப்பட்டது. AMCE உறுப்பினர் Er.A. பாஸ்கரன் அவர்களும், மற்றும் AMCE செயலாளர் Er.J.வெங்கட்ராமன் அவர்களும் சிறப்பாக விளக்கமளித்தனர்.

2)அன்றையதினம், மாலை 3.30 மணியளவில் மடீட்சியா அரங்கில் ‘‘பொறியியல் துறையில் வேலை வாய்ப்புகள்’’ குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. வருமானவரித்துறை உதவி ஆணையாளர் திரு. V.நந்தகுமார் IRS அவர்கள் Career Guidelines குறித்தும், AMCE உறுப்பினர் Er.A.பாஸ்கரன் அவர்களும் AMCE செயலாளர் Er.J.வெங்கட்ராமன் அவர்களும் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு குறித்து சிறப்பாக விளக்கமளித்தனர்.

<u>நிறைவு விழா:</u>

29.04.2019 அன்று காலை 11.30 மணியளவில் மடீட்சியாவின் பில்ட் எக்ஸ் கண்காட்சியின் நிறைவு விழா மடீட்சியா அரங்கில் நடைபெற்றது. வருமானவரித்துறை உதவி ஆணையாளர் திரு. V.நந்தகுமார் IRS அவர்கள் நிறைவு விழா உரையாற்றி சிறப்பித்தார். மடீட்சியா தலைவர் திரு.K.P.முருகன் அவர்கள் முன்னிலை வகிக்க, சங்க கௌரவச்செயலாளர் திரு.B.முருகனாந்தம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

